## 3. ஒரு எழுத்துருவுக்கு இணைநிலை எழுத்துரு எழுதுதல்,

2 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
எழுத்துருக்கள் (வலம் பார்க்கவும்)

மாணவர்கள் ஓர் எழுத்துரு வார்ப்பினைப் (ஒரு சிறு கதை அல்லது கவிதை) பெறுகின்றனர். அவ் வார்ப்பினை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் ஒரு மாற்றினை எழுதுவர். மாற்று என்பது மாற்றி அமைக்கப்பட்ட கதைத் தலைமைப் பாத்திரமாகலாம் (குலைக்கும் நாய், கத்தும் பூனைக்குப் பதிலாக). ஏனைய நல்ல பயன்பாடுகள் ஒரு வார்ப்புக்கு அமைய மாற்றப்பட்ட கடிதங்கள், மன்னிப்புக்கள், விண்ணப்பங்கள் முதலியன. இணைநிலை எழுத்துருக்களுடன் செயற்படல் குறிப்பாக திறன்குறை மாணவர்களுக்கு பொருத்தமானதாகும், ஏனெனில் மொழி ஆக்கத்துக்கான கடின நிலை கணிசமான அளவு குறைவாகும். மேலே 15.2 எடுத்துக்காட்டையும் பார்க்க: மாற்றுச் சொல் தேர்வு, அத்துடன் எம்.லூத்தின் பிறப்பாக்க எழுத்து பற்றிய சிறந்த கட்டுரையினை http://www.kompetenzzentrum-sprachfoerderung.de/fileadmin/user_up-load/didacta-Version.pdf என்பதில் பார்க்கவும்.

---

## 4. எழுத்துருக் கட்டமைப்பை பகுப்பாய்வு செய்தல்

4 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
எழுத்துருக்கள்
(வலம் பார்க்கவும்)

மாற்று 1: மாணவர்கள் ஒன்று அல்லது பல எழுத்துருக்களைப் (தெளிவாகக் கால ஒழுங்கில் கட்டமைக்கப்பட்ட) பெறுகின்றனர், அதனுடன் ஒரு தாளும், அதில் அவர்கள் காலவரிசையைக் கீறுவர் (பார்க்கவும் #9). பின்னர் அவர்கள் எழுத்துருவிலிருந்து திறவுச் சொற்களை கால ஒழுங்கில் வெவ்வேறு முனைகளில் காலவரிசையில் எழுதுவர்.

மாற்று 2: பல்வகைப்பட்ட பெருஞ்சவால் மிகுந்த எழுத்துருக்களைப் பெறுகின்றனர். எழுத்துருக்களை அவர்கள் குறைந்தது மூன்றாகப் பிரித்து முன்னுரை, பெரும்பகுதி, நிறைவு என்பவற்றை வெவ்வேறு நிறங்களால் அடையாளப்படுத்துவர்.

---

## 5. தொடக்கத்துக்கு முடிவு காணலும் முடிவுக்கு தொடக்கம் காணலும்

2 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
எழுத்துரு
தொடக்கங்களுடன்
தாள்களுடன்

மாணவர்கள் எழுத்துரு ஒன்றின் தொடக்கத்தினைப் (எ-டு. ஒரு கதையின் முதல் வாக்கியங்கள் அல்லது ஒரு செய்தித்தாள் கட்டுரையின் முதல் பந்தி) பெறுவர். தனியாக, இணையராக, மூன்றுபேர் கொண்ட குழுக்களாக செயற்படும்போது, அவர்கள் எழுத்துருவின் மிகுதிப் பகுதியை எழுதுவதுடன் அதன் பெரும்பகுதியையும் முடிவையும் அல்லது சுருக்கத்தையும் தெளிவாக உயர்வுபடுத்த வேண்டும். எழுத்துரு நீண்டதாயின் துணைத் தலைப்புகள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். முடிவில், அவர்கள் தங்கள் எழுத்துருவின் கருத்துப்பாங்குகளை எடுத்துரைப்பர். இத்தகைய பல்வேறுபட்ட கருத்துப்பாங்குகளை எடுத்துரைக்கும்போது அது பெரும்பாலும் உற்சாகமூட்டுவதாக அமையும், ஏனெனில் அவை எல்லாமே ஒரு பொதுத் தொடக்கத்திலிருந்தே மேற்கிளம்பின.

மாற்று 1: மாணவர்கள் ஓர் எழுத்துருவின் முடிவினைப் பெறுகின்றனர், அவர்கள் எழுத்துருவின் தொடக்கத்தையும் பெரும்பகுதியையும் எழுதவேண்டும்.

மாற்று 2: "இடையீட்டுக் கதைகள்": மாணவர்கள் ஓர் எழுத்துருவின் (கதை, நகைச்சுவை, உண்மை ஆவணம்) தொடக்கத்தையும் முடிவையும் பெறுவர், எழுத்துருவின் பெரும்பகுதியை கண்டுபிடிக்கவேண்டும் / எழுதவேண்டும்.

---

## 6. விளையாட்டு விதிகள், கைவினைப் பொருட்கள் செய்யும் அறிவுறுத்தல்கள், சமையல் செயன்முறைக் குறிப்புகள் எழுதுதலும் சேர்த்தலும்

2 - 9 ஆந் தரம் | 40 மணித்துளிகள்

விளையாட்டு விதிகள், தொடர்விசைகளைக் கட்டுதல், கைவினை அறிவுறுத்தல்கள், செயன்முறைக் குறிப்புகள் முதலியன போன்று தெளிவான தொடர்வரிசையில் செயல் சார்ந்த விதிகளை எழுதுதற்கு குறிப்பாக தெளிவான, தொடர்வரிசை வடிவமும் எழுத்துருக் கட்டமைப்பும் வேண்டியதாகும், இல்லாவிடில் எழுத்துரு வாசகனுக்கு வழிகாட்டுவதாகவன்றி குழப்புவதாக அமையலாம். அத்தகைய எழுத்துருவின் தரத்தினை அதன் செயல்திறன் அல்லது அது எப்படி நன்றாக "செயற்படுகிறது" என்பதனால் அளவிடலாம். செய்முறைகள், மன்ற அறிவுறுத்தல்கள் ஆகிய எழுத்துருக்களை ஒரு வகுப்பாகத் திரட்டுதல் குறிப்பாக ஒரு மகிழ்வுறும் கருத்திட்டமாகும், ஏனெனில், எழுத்துருக்கள் பயனுடையன மற்றும் நடைமுறைத்தன்மையுடையன. வழக்கமான வகுப்புகளின் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் இருமொழி திரட்டுகள் செய்தல் பயனுள்ள வேறு கருத்திட்டங்களாகும். (கீழே #21 ஐயும் பார்க்கவும்)

III